தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. **REGD. NO. M. 4455.**

# திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்:
C. N. அண்ணாதுரை M. A.,

"வாய்ந்த போர்க்குறி போல்மதக் குறிஇனிதா!
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா?"
[கவி பாரதி தாசன்]

மலர் 1 ‖ காஞ்சிபுரம் 12—7—42 சித்திரபானு—ஆனி 28—ஞாயிறு ‖ இதழ் 19

## ஆறுமுகமும் அழுகுரலும்

பரதன்

"ஐந்து வீரர்களும், ஒரு சூரரும்" என்ற தலைப்புக் கொடுத்து, அடுத்த வீட்டுக்காரி பிள்ளைபெற, தான் அரசமரம் சுற்றி அடிவயற்றைத் தடவியும் கருவுறாத காரணத்தால், சலிப்புக்கொண்டவள் குழவிக் கல் கொண்டு அடிவயிற்றிலே இடித்துக்கொண்ட கதை போலே, தன் ஆசிபெற்றவர்களுக்கு, தன் ஆராதனைக்குரியவர்களுக்கு, வைசிராய் நிர்வாக சபையிலே இடங் கிடைக்காமல் வேறு யாராருக்கோ கிடைத்துவிட்டது கண்டு, மனம் வெதும்பி, அழுகுரலைக் கிளப்பியிருக்கிறது பரிதாபத்துக்குரிய பாரததேவி! என் அனுதாபத்தை அதற்கு அனுப்புகிறேன், "தேவி தேம்பாதே! உயர உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாவதில்லை! ஆசை தாசில்செய்ய இருக்கிறது நிலைமையோ கழுதைமேய்க்க வைக்கிறது என்பார்களே அதைப்போலாயிற்று உன் அன்புக்குரியவர்கள் கதி. என்ன செய்யலாம். இனி ஒருமுறை, சர்க்காரை மிரட்டிப்போரிடுவோம், புறப்படுவோம் என்று புலம்பிப்பார். கிடைத்தால் பெற்றுக்கொள்" என்று தேவிக்குக் கூறிட என் நெஞ்சு என்னைத் தூண்டுகிறது. வைசிராய் நிர்வாக சபைக்கு இப்போது புதிதாக ஆறு பிரமுகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிலே சர். மகமது உசுமானுக்கும் டாக்டர் அம்பேத்காருக்கும் இடங்கிடைத்திருப்பதும், முக்கியமான இலாக்காக்கள் கிடைத்திருப்பதும், தேவிக்கு மிக்க துக்கத்தைத்தான் கொடுத்திருக்கும்! தீண்டாத ஜாதியார் என்றால் அவரை ஆரியரும் அவர் அடிவருடும் அஞ்ஞான சொரூபிகளும் தீண்டார், ஆனால், அவர்களுக்கு நாடாளும் நிலையத்திலே நடு நாயக இடங்கிடைப்பது கண்டு ஆரியர் மனம் அழியும், மமதை அழியும். ஆணவமழிந்து ஆரியர், அன்றுபோல் இன்றில்லை, இன்றுள்ளதும் நாளை நில்லாது போலும், என்று எங்கும்காலம் பிறந்து, நாளொருமேனியும்பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருகிறது. இந்திரனைச் சந்திரனை, இருக்குவை யஜுரை, யாகத்தை யோகத்தை, தசரதராமனை, பலராமனை, கருடனை கடுவனை, எதை எதையோ கூறி எய்த்துவந்தகாலம் போச்சே என்று எக்கம் பிறந்துவிட்டது, பாபம்! மீசை நரைத்துப் போச்சே, கிழவா, ஆசை நரைக்கலாச்சோ! என்று கேழ்ப்பதுபோல், ஆரியரே உமது காலம் மலையேறலாச்சே, கனவு அழிந்தொழியலாச்சா என்று கேட்கவும் என்மனம் என்னைத் தூண்டுகிறது!

தாவிக்குதித்து, வாலைக் குழைத்து, வாயைத் திறந்து, எகிறிக்குதித்தும், எட்டாததாலே, நரிகூறிற்றாமே, "சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும்!" என்று, அது போல், பாரததேவி போன்ற பஞ்சாங்கங்கள், தம்மவருக்குக் கிடைக்காததால், இந்த வைசிராய் நிர்வாக சபைப் பதவிகளைப்பயனற்றன, பசையற்றன, என்று பல சொல்லித் தமது பதைப்பை ஆற்றிக்கொள்கின்றன. எதிர்வீட்டிலே கலியாணம், இங்கோ இவள் கணவன் இறந்ததினம், பிறந்தது, சிரார்த்தம். எதிரே, ஜடைபோட்டு மலர்சூட்டி, மங்கள ஸ்நானம்செய்து, மணவறையிலே, பெண் அன்னமென நடந்து, ஆண்முகன் கைபற்ற, வெள்ளை உடையும், விம்மும் விழியும் மொட்டைத் தலையும், குட்டைக்கருத்துங்கொண்ட விதவை அவர் ஆடினார், பாடினார், எனக்காபரணம் சூட்டினார், ஓடினார் உழைத்தார், எனக்கு ஒன்பது வேலி நிலந்தந்தார், படுத்தார் புரண்டார், பாவிஎன்னை விட்டுப்போனாரே! என்று பிரலாபிப்பது போலே, ஜாம் ஜாமென, வைசிராய் வரவேற்க, சர்க்கார் அதிகாரிகள் எதிரே சலாமிட்டு நிற்க, புதிய அங்கத்தினர்கள், வேலையில்அமரச்செல்கின்றனர். அதுகிடைக்காததால் வீங்கிய மனதுடன் வேதனைப்படும் வீணர்கூட்டம், ஐந்துவீரர்களும் ஒரு சூரரும் என்று கிண்டல்

பேசியாவது தமது துக்கத்தை மாற்றிக்கொள்ள முயலுகின்றன. ஐந்துவீரர்களும் ஒருசூரரும், இவைகளைக் கவனிக்கவா போகிறார்கள்! வசட்டுத்தவளையின் கூச்சல்கேட்டு, வான்மதிவாட்டமுறுமோ! கிழட்டுப் பிணங்களின் வாய் அசைபோடுவது கண்டு, முறுக்கு முத்தாயிகள், மூலைக்கா போயமர்வர்! யாரது, முன்பு சொன்னது "குக்கல் குலைத்திருக்க, ஒட்டகம் வழி நடந்தே சென்றது" என்று! ஆம்! சர். சாமுவேல் ஹோர் கூறினார்! காங்கிரசைப் பற்றித்தான் முன் போர் முறை கூறினார். அந்த ஐவர் வீரராக வேனும், மற்றவர் சூரராகவேனுமிருக்கட்டும், அவர்களைக்குறை கூறும், இந்த தம்பட்டங்களின் தலைவர்கள் கூட்டத்தின் தன்மை என்ன! மூலவருக்கோ, சுயபுத்தி கிடையாது! உற்சவருக்கோ உண்மையை உணரும் திறமில்லை! பிரதம பூசாரியோ, பேதபுத்தியால், பிறிதோரிடம் புகுந்தார்! சேனாவீரருக்கோ சீற்றமிருக்கிறது, சமர் எழா முன்பு, சமர் என்றதும் சாந்தம் மேவிடுகிறது, இடையே நிற்கும் பக்திமான்களுக்கோ, சக்தியும் யுக்தியுமில்லை! இதுதானே தேவி! உன் தலைவர்கள் நிலை; இதைக்கண்டு முகத்தைத் தொங்கவிட்டுக்கொள்ளாது, திமிதிமி எனக்குதித்து, கா ஃவெனக் கூவி நிற்பது ஏனோ, யோசித்துப்பார்.

மூலவர் என்று நான் குறிப்பிடுவது, யாரை என்பீர், காந்தியாரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்தானே நாலணா தந்தாலும் தாராவிட்டாலும், கண்கண்ட தெய்வம்! அவரைச் சுயபுத்தி இல்லாதவர் என்று கூற எவ்வளவு துடுக்குத்தனம் இருக்கவேண்டும், பாதகனின் பதட்டத்தைப் பாரீர், என்று கதர்ச் சட்டைகளே! பிறர் கருத்துக்குத் தாளம் கொட்டுபவரே! என்னைக் கோபியாதீர்! நான் துட்டத்தனத்தாலோ, பதட்டச்சுபாவத்தாலோ, கூறுவதல்ல தயவு செய்து நம்புங்கள்!

கொண்டவன் குரங்கே என்றால், கண்டவன் திம்மான் என்பானும், என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். அதுபோல், காந்தியாரைத்தமது தலைவராகக் கொண்டுள்ள தாசர் கூட்டத்தில் சிலரே, அவரைப் பற்றிய விஷயங்களை வெளியிட்டதால், நானோ பிறரோ காந்தியாரின் திருக்கலியாண குணத்தைக் காணீர் என்று எடுத்துக்காட்டி நகைப்பதிலே குற்றமென்ன! மேலும், உண்மையை உரைக்க அஞ்சுபவன், கோழை மட்டுல்ல, நாட்டுக்குத்துரோகி, மக்களை மடத்தனத்திலாழ்த்தும் பாதகன், என்பேன்.

கண்ணவிந்தவனைக் கண்ணாயிரமே என்றும், நடந்தாலே தடுக்கி விழுபவனைத் தாண்டவராயனென்றும், திணறும் பேச்சுக்காரனை, நாவாயிரம் என்றும், கருத்தமேனியளைப் பொன்னி என்றும் கூறுவது பொருந்தாதன்றோ!

கோபத்தைக் குறைத்துக் கொண்டு, குமுறும் நெஞ்சை உம்மிடமே நிறுத்தி, கண்களைத் துடைத்துக்கொண்டு, நான் கூறுவதைக் கேளப்பா, தேசியத் தோழா! காந்தியார் சொந்தப்புத்தி இல்லாதவர் என்று நான் கூறுவது, 'கல்கி'யின் ஆதாரத்தின் மீதாகும்! கல்கியோ, காங்கிரஸ் ஏடு! ஜஸ்டிசை ஒழிக்க ஜல்லடம் கட்டிடும், சுயமரியாதையைப் பொசுக்கப் பறையடிக்கும், பார்ப்பனியத்தைப் பரப்பப் பாடும், பார்ப்பன ஏடு! அத்தகைய 'கல்கி' காந்திக்குச் சுயபுத்தி இல்லை என்று எடுத்துக்காட்டி இருக்கிறது! உண்மையாகவா! என்று பதைபதைத்துக் கேட்பீர்! படியும், இதனை. பதற வேண்டாம் இனியும்.

"மகாத்மா காந்தி அவதாரபுருஷர், சத்திய சந்தர், அஹிம்சா மூர்த்தி, அன்பின் உருவம். அவரைப் போன்ற தலைவர் கிடைப்பதற்கு நம்தேசம் எவ்வளவு பாக்கியம் செய்திருக்க வேண்டும்" என்று கல்கி, 3ந் தேதி எழுதுகிறது.

இது என்ன பாதா! கல்கி காந்தியாருக்குச் சுயபுத்தி இல்லை என்று கூறினதாகச் சொன்னாய், ஆனால் கல்கி எழுதியிருப்பதைக் கண்டால், அது காந்தியாரை அர்ச்சித்திருப்பதாக வன்றோ தெரிகிறது. இப்படியும் பச்சைப்புளுகு பேசுவதா? என்று கேட்பீர்கள். அவசரம் வேண்டாம் அன்பரே! இந்த அர்ச்சனை, அட்டவணைக்குக் கல்கி போட்டுக் கொண்டது. பிறகு, காந்தியாரின் புதுப்போர்த் திட்டத்தைப்பற்றி எடுத்துக் காட்டிவிட்டு, அதிலேமுதலிலே ஒரு 'தவறு' இருந்ததென்றும், பிறகு, அதனைக் காந்தியார், பிறர் கூறக்கேட்டுத் திருத்திக்கொண்டார் என்றும் எழுதுகையிலே தான், அர்ச்சனையுடன் உண்மையை, நடிப்புடன் நிசத்தை மேல்பூச்சுடன் உள்ளக்கிடக்கையை எடுத்துக்காட்டியிருக்கிறது. அதைக் கவனியும் இதுபோது.

"முன்னேயெல்லாம் செய்ததுபோல் மகாத்மா இதைக் குறித்து ராஜாஜியிடம் கலந்து யோசித்திருந்தால் ராஜாஜி மேற்படி இடுக்கை. முதலிலேயே எடுத்துக்காட்டி அடைத்திருப்பார்" என்று கூறுகிறது கல்கி.

சேளுங்கள் மூலவரின் யோக்யதையை! அவர் வெளியிட்ட திட்டத்திலே ஒரு இடுக்கு, தவறு, இருந்தது, அதாவது அவர் தயாரித்த திட்டம் ஓட்டையுள்ளது. ஆனால் அந்தஓட்டை அவருக்குத் தெரியவில்லை! பிறர் எடுத்துக் காட்டியபிறகு தெரிந்து கொண்டார். ஆனால், இத்தகைய ஓட்டை ஒடிசல் இல்லாததிட்டம் தேவைஎனில், காந்தியார் முன்பெல்லாம் செய்ததைப் போலச் செய்திருக்க வேண்டும் என்றுகல்கி யோசனை கூறுகிறது. இதற்கு முன்பு காந்தியார் கையாண்ட முறையாதோ என்பீர்! கல்கிகூறுவதைக் கேண்மின், ஆச்சாரியாரை முன்பெல்லாம் காந்தியார் கலந்தாலோசித்ததுபோல் செய்திருக்கவேண்டுமாம்! எனவே, காந்தியார், இதுவரை ஆச்சாரியார் சொல்லிக்கொடுத்ததைக் கூறிவந்தார் என்பது தெரிகிறது. ஆகவே காந்தியாருக்குச் சுயபுத்தி இல்லை, ஆச்சாரியார் அருளும் அறிவை இரவல் கொண்டே தான் அவர் இதுவரை வாழ்ந்து வந்தார் என்பதும் தெரிகிறதல்லவா!

சுயபுத்தி இல்லாது, சூழ்ந்திருப்போரிடம் இரவல் வாங்கிப் பிழைக்கும் காந்தியார், அவதார புருஷராம்!

அவதார புருஷர்கள் அறிவை இரவல் வாங்கும் பேர்வழிகளாகவே இருப்பர் போலும்!

ஆச்சாரியார் போனாலென்ன, அபுல் கலாம் ஆஜாத் இல்லையா, அலகாபாத் பண்டிதர் இல்லையா, சர்தார் இல்லையா, சியாமளா தேவி இல்லையா, என்று கேட்பீர்கள். இருக்கிறார்கள், பலர். இருந்துமென்ன! அவர்கள் சூன்ய மூளைகள்! அடியேன் கூறுவதல்ல!

(11ம் பக்கம் பார்க்க)

புதிய தொடர் கதை!

# கலிங்கராணி

சௌமியன்.

## கணைகள் — காட்டில் அல்ல!

"வேங்கையைக் கண்டால் பயமிருக்காதோ?"

வேலிருக்கும் போது!

சிறுத்தை சீறுமாமே?

ஆமாம், சிரித்துக் கொண்டே அதைத் துரத்திப் பிடிப்பேன்.

கண்ணாளா! காட்டிலே, நாட்டிலுள்ளோருக்கு என்ன வேலை? ஏன் இந்த வேட்டை? மன்னன் மன மகிழ, மதுர கீதம் கேட்கலாம், நடனம் காணலாம், மிருகவேட்டையாடி, ஆபத்தை அணைத்துக் கொள் வதிலே ஓர் ஆனந்தமா?

வீரருக்கு, வேட்டை வெண்ணிலாச்சோறு! வெஞ் சமரே விருந்து. தோட்டத்துப்பூவைத் தொட்டுப் பறித்துக் கொண்டையில் செருகும் கோதையர் களிப் பதுபோல், வேலால் வேங்கையைக் குத்திக்கொன்று, அதன் தோலையும் நகத்தையும் எடுத்து வரும்போது எமக்குக்களிப்பு.

ஆபத்தான விளையாட்டு.

அஞ்சாதே அஞ்சுகமே! வீரரின் ஆரம்பப் பள்ளி அது தான்.

எனக்கென்னமோ, நீங்கள் எவ்வளவு சொன்ன போதிலும் நெஞ்சிலே துடிப்பு இருக்கிறது.

சிற்றிடையே! சோகிக்காதே, சுந்தர முகத்தின் சோபிதம் சிதைகிறது. உன் புன்னகையை எனக் குத்தா. நான் புறப்படவேண்டும்.

புன்னகை போதுமா?

வள்ளல்கள், கேட்டதற்கு மேலும் தருவர். தேவி! நீ உன் பக்தனுக்கு வரந்தர மறுப்பாயா?

எவ்வளவு சமர்த்தான பேச்சு! சரசத்தில் நீரே முதல் பரிசு பெறுவீர்.

உண்மை! உன்னைப்பெறும் என்னை, ஊரார் அங் ஙனமே கருதுகின்றனர்.

பூங்காவில் இங்ஙனம் பேசி மகிழ்வதை விட்டு, புறப்படுகிறேன் புலிவேட்டைக்கு என்று கூறுகிறீரே, நெஞ்சிலிரக்க மற்றவரே, கொஞ்சுவதை விடும்.

வஞ்சி! வதைக்காதே. நேரமாகிறது. நினைப்பிலே ஏதேதோ ஊறுகிறது.

ஊறும், ஊறும். ஊஹூம், அது முடியாது, நட வாது, கூடாது. என்ன துணிச்சல்! என்ன ஆசை எவ்வளவு ஆனந்தம்!

அணுச்சஞ்சலமேனும் இல்லாத இடம்!

கீதமா?

யாழின் நரம்புகள் தடவப்பட்டபின், இசை எழாதோ!

அரச அவையிலே புலவராக அமரலாம் நீர்!

வேண்டாமம்மா! புலவர்கள் தொழில் கெட்டே விட்டது. முன்பு நம் நாட்டுப்புலவர்கள், ஓடும் அருவி, பாடும் குயில், ஆடுகின்ற மயில், துள்ளும் மான், மலர்ச்சோலை, மாது உள்ளம், முதலியன பற்றிப்பாடி மகிழ் வித்தனர். இப்போதோ, மச்சவ=ராகமாம், மாபலி காதையாம், ஏதேதோ பொய்க் கதைகளை யன்றோ கூறி வாழ்கின்றனர். அந்தவேலை எனக்குஏன்?

நாதா! நீர் என்ன, அவைகளை நம்பவில்லையா? நமது மன்னர்கள், அந்தக் கதைகளைக் கடவுள் அருள் பெறக்கேட்கின்றனரே! நாடுமுழுதும் நம்புகிறதே, உமக்கு அது பிடிக்க வில்லையோ?

காதுக்கு இனியகற்பனை என்று, புரட்டரின் புன் மொழிகளுக்கு நம் நாடு இடந்தந்து விட்டது. குயிலி! அதை எண்ணுகையில் நெஞ்சங் குமுறுகிறது. நாட் டவரின் நாட்டம், இப்போது மண்ணில் இல்லையே, விண்ணிலன்றோ சென்றுளது.

உண்மை! அங்குதானே, தேவர் வாழுகின்றனர், மூவர் உரைகின்றனர்.

தேவரும், மூவரும், தேன் பூசிய நஞ்சு! விண், ஒரு வெளி! ஆங்கு உலகம் கற்பிப்பவன் ஓர் சூதுக் காரன். அதை நம்புகிறவன் ஏமாளி!

எது எப்படியோ கிடக்கட்டும் என்துரையே! எனக்கு, தேவரும் மூவரும் நீரே!.

வானமுதம் நீ!

பார்த்தீர்களா! நீரே இப்போது, தேவாமிருதம் என்று, அந்தக் கதையை நம்பித்தானே கூறுகிறீர்?

நம்பிக்கையல்ல! என் நரம்பிலும், அந்த விஷம் மெல்ல மெல்லப் பரவி வருகிறது. அதினின்றும் நம் மவரில் தப்பினோர் மிகச்சிலரே. இனி வருங்காலத் திலே இந்த நஞ்சு, நந்தமிழ் நாட்டை என்ன பாடு படுத்துமோ அறியேன். பண்டு நம்மவர் வாழ்ந்த தற்கும் இன்று நாம் இருப்பதற்கும் வித்தியாசம் அதிகமாகத்தான் இருக்கிறது. எங்கிருந்தோ இங்கு குடிபுகுந்து, போரிடவோ, பாடு படவோ இசையாது பொய்யுரையை மெய் யென்றுரைத்து வாழும் ஆரிய ருக்கு, அரச அவையிலே இடங்கிடைத்து விட்டது. மன்னன் எவ்வழியோ அவ்வழியே மக்களும்!

பாபம்! ஆரியர்கள், என்ன செய்கிறார்கள்? ஏதோ வேள்வி என்றும் வேதமென்றும் கூறிக்கொண்டுள்ள னர். பசுபோல் இருக்கின்றனர். படை எனில் பயங் கொடுகின்றனர். நாம் இடும் பிச்சையை இச்சையுடன் ஏற்று, கொச்சைத் தமிழ் பேசி, ஊரிலே ஓர் புறத் தில் ஒதுங்கி வாழ்கின்றனர். எங்கோ உள்ள தமது

தேவனைத்தொழுது, உடலிளைத்து, உழல்கின்றனர். நம்மை என்ன செய்கின்றனர்.?

நம்மை ஒன்றும் செய்ய முடியவில்லை! மனமிருக்கிறது மார்க்கம் இன்னமும் கிடைக்கவில்லை. நாட்டிலே வீரருக்கே இன்னமும் இடமிருக்கிறது. நாட்கள் பல போயினபின், நம்மவர் நிலையாதாகுமோ அறியேன். புலி, எலியாகுமோ, தமிழர் தாசராவரோ என்றும் நான் அஞ்சுகிறேன்.

வீண்பீதி! ஆரியர், ஏதும் செய்யார். நாதா! காதலருக்குத் தூதுவராக இருந்து. இருதய கீதத்தை ஒலிக்கச் செய்கின்றனர். அவர்கள் மீது ஏனோ உமக்கு வீணான ஓர் வெறுப்பு.

கண்ணே! கவலைதரும் பேச்சை விடுவோம். காலம் கடுகிச் செல்கிறது. நான் போகுமுன், கனிரசம் பருகினால், என்களைப்பு தீராதோ, ஏதோ, இப்படி, துடியிடை துவளத்துள்ளாதே மானே, விடமாட்டேன்! இந்த மானைப் பிடிக்காவிட்டால், மதம் பிடித்த யானையையும், மடுவிலே மறையும் புலியையும் வேட்டையாட முடியுமோ. நில்! ஓடாதே!!

அதோ, காலடிச் சத்தம். ஆமாம்! அரசிளங்குமரிதான். சுந்தரி தேவியின் சதங்கை ஒலிதான் அது. போய் வாரும் கண்ணாளா! ஜாக்ரதையாக வேட்டையாடும். மான்வேட்டை யல்ல, மங்கையர்வேட்டையுமல்ல. புலி, கரடி, காட்டுப்பன்றி முதலிய துஷ்ட மிருகங்கள் உலவும் காடு.

இளைய ராணியாரின் குரலா, கேட்கிறது?

ஆமாம்! அரசிளங்குமரி அம்மங்கையின்குரல்தான்!

பூங்காவிலே, நம்மைக்கண்டு விட்டால்,? நாம் இதுவரை அரசிளங்குமரியிருகண்களில்படவில்லை, ஆனால்; காதுக்கு விஷயம் எட்டித்தான் இருக்கிறது!

யார் சொல்லி விட்டார்கள்?

சொல்லுவானேன்! என் கண்களின் மொழியை, அவள் அறியாது போகமுடியுமா! அம்மங்கையும், ஒரு பெண்தானே! அதோ, கூப்பிடுகிறார்கள், என்னைத்தான். பூக்குடல் எங்கே! கொடுங்கள் இப்படி! இதோ வந்தேனம்மா! வந்து விட்டேன்! போதும், இது இருபத்தி ஏழாவது முத்தம், போதும், காலடிச் சத்தம் கனமாகி விட்டது. விடும், புறப்படும்.

மற்றதைப்பிறகு மறவாதே, நான் வருகிறேன், தஞ்சமடைந்தவனைத் தள்ளமாட்டாய் என்று. என் நெஞ்சுரைக்கிறது.

சரி! சரி! வேட்டைமுடிந்ததும், விரைந்து வாரீர் மாலை தொடுத்துவைப்பேன்.

மதியே! மறவாதே, நான்வருகிறேன்.

**குலோத்துங்க சோழன்** அரண்மனைப் பூங்காவிலே, நடந்த காதற்காட்சி, நாம்மேலே தீட்டியது. அந்தப்புரத்திலே, அரசிளங்குமரி அம்மங்கைத் தேவியின் ஆருயிர்போன்றிருந்த தோழி, தன் காதலனைக் காண, பூங்காபுகுந்தாள். அவளுக்காக, மாமரத்தடியிலே காத்துக்கிடந்த வீரன், தென்றல் கண்டவன் போல், தாவிக்குதித்தெழுந்து தையலை ஆரத்தழுவினான். கையிலிருந்த பூக்குடலை தரையில் விழ, கூந்தல் சரிய, கோதை, குதூகலமாகத் தன் காதலனைக் கட்டித் தழுவிக்கொண்டாள். அவர்கள் கிளப்பிய 'இச்' சொலிகேட்ட, பறவைகள், மரக்கிளைவிட்டு மற்றோர் மரக்கிளைக்குத் தாவின. வானம் துல்லிய நிறத்தோடு விளங்கிற்று. கதிரோன் ஒளிப்பிழம்பாக மட்டுமே இருந்தான், வெப்பத்தை வீசும்வேளை பிறக்கவில்லை. காலை மலர்ந்து, யாந்தர் கண்மலர்ந்த நேரம். மாலை மலரும் காதல், அரும்பாகி இருந்தது எனினும், அன்று அவனுக்குக், காலையிலேயே மலர்ந்து விட்டது. மாலையில் அவன் வீடு திரும்ப நெடுநேரம் பிடிக்கும். வேட்டைக்குச் செல்கிறான் அன்று! வேட்டைக்குப் புறப்படுமுன், வேல்விழியாளைக்கண்டு, விருந்துண்டு போகமனம் தூண்டியது. கால்கள், வேலிகளையும் முட்புதரையும் தாண்டின. கள்ளத்தனமாக உள்ளே நுழைந்தான். காவலன் காணவில்லை என்பது அவன் நினைப்பு. காவலனுக்குக் கண்ணுமுண்டு, கருத்துமுண்டு! எனவே, காதலர் கூடிப்பேசுவதைக் கண்டுங் காணாதவன் போல், பலமுறை இருந்ததுபோல், அன்றும் இருந்தான். மேலும், அந்த வஞ்சி, அரசிளங்குமரியின் ஆருயிர்த்தோழி குணவதி. கோலமயில் சாயலும், கிளிமொழியும், கனகநிறமும், கருணை உள்ளமும் பெற்ற பண்பினள். அவளது காதலன், வீரர்க்கோர்திலகம். மன்னன் குலோத்துங்கனின் குதிரைப் படைத்தலைவருள் ஒருவன். வீரத்தாலேயே, இளம் பருவத்திலேயே, அந்த உயர்நிலைபெற முடிந்தது. தொண்டைமானிடமிருந்து 'தோடா' பரிசு பெற்றவருள் அவன் ஒருவன். எனவே இவ்விருவரும் சந்தித்துப்பேச, மன்னனின் பூங்காவை மன்றலாக்கிக்கொண்டது கண்டு, காவற்காரன், களித்தானேயன்றி, கோபித்தானில்லை. அவர்கள் சந்திக்கும்போது, அவன், உலகமே காதல் மயமாக இருப்பதை எண்ணுவான்! குக்குக்கூவெனக் குயில்கூவி, காதற்கீதத்தை அள்ளி அள்ளி வீசுவதை நினைப்பான். நெடுநாட்களுக்கு முன்பு, நீர்மொள்ள அருவிக்குவரும் நீலநிறச்சேலைக்காரி வேலாயியைத்தான் கண்டதும், கனைத்ததும், அவள் முதலில் மிரண்டதும், பிறகு இணங்கியதும், ஆகிய, பழய காதல் நிகழ்ச்சியை எண்ணுவான். "நரைத்தேன் இன்று, ஆனால் நானும் முன்னம் நாடினேன், பாடினேன், ஆடினேன், அணங்குக்காக," என்று மனதில் எண்ணிக்கொள்வான். தோட்டத்து வாசலிலே நின்று, யாரும் உள்ளே நுழையாதபடி பார்த்துக்கொள்ளும் தொழிலைவிட்டு, காதலரைக்காண யாரும் புகாதபடி, காவலிருப்பான். இதனைக் காதலர் அறியார். அவர்தம்மையன்றி வேறெதைத்தான் அதுகாலை அறிதல் முடியும்!

அரசிளங்குமரியின் குரல் கேட்டு, அரைகுறையாயிற்று, அன்று காதலர் விருந்து. விரைந்தோடி வந்த தோழியைக் கண்ட, அம்மங்கை, கோபித்துக் கொண்டு, "காலமும் அறியாய், இடமும் தெரியாய், கடமையையும் மறந்தாய்" என்று கடிந்துரைத்தாள். தோழி தலை குனிந்து நின்றாள். பூக்குடல் காலியாகவே இருந்ததைக் கண்ட மற்றத்தோழியர், "மனம் பறிக்கும் வேலையிலே மலர் பறிக்கமறந்தாள்" என்று கூற அதுவரை கோபித்தது போல் பாவனைசெய்த அரசிளங்குமரி, கலீர் எனச்சிரித்து, தோழியின் கன்னத்தைக் கிள்ளி, கதிரோன் வாராவிட்டால், தாமரை மலராது என்பார்களே அதுபோல், உன் அன்பன் வாராவிட்டால், உன் முகம்மலருமோ!" என்று கேலி செய்

தாள். தோழி அப்போது தான் பயந்தெளிந்தாள். பயம்போனதும் நாணம் நான்உன்னைவிடுவேனா என்றுரைத்துக் கொண்டே அவளைப் பிடித்துக்கொண்டது.

“வேட்டையாடக் காட்டுக்குப்போகக் கிளம்பியவன், இங்கே வந்தது ஏனடி!” என்று அரசிளங்குமரி ஒரு தோழியைக்கேட்க, அவள் “இவளைக்கண்டு மானென்று மயங்கி வந்தான் போலும்”. என்று சொல்லிச்சிரித்தாள்.

“வேட்டைக்குக்கணைகள் வேண்டும். இங்கும் கணைவிடு காட்சிதான் நடந்தது.” என்று கிண்டல் செய்தாள் அரசகுமாரி

“ஆமாம் தேவி! சாதலுக்குச் செலுத்தும் கணைகள் காட்டிலே! காதலுக்குக்கணைகள் காட்டில் அல்லவே!” என்றாள் குறும்புக்காரத் தோழி.

“ஆமாம்! காட்டில் அல்ல! நம் வீட்டுத்தோட்டத்தில்” என்று கூறிக்கொண்டே, அம்மங்கை, காதற் குற்றவாளியைக் கைபிடித்திழுத்து கரகரவெனச் சுற்றி ஆடினாள், களித்தாள். அம்மங்கையும், ‘அதன் வயப்பட்டாளோ, என்று மற்றத் தோழியர் சந்தேகித்தனர். யார்கண்டார்! யார்காண வல்லார்! காதற்கணைகள், அம்மங்கையை மட்டும், விட்டுவிடுமோ! அதன் சக்தியின் முன்பு, பட்டத்தரசியாக வேண்டியவரும், தட்டிக்கெட்டுத் கடுமாறித்தானே திருவர். கண்டவர் அஞ்சிடக் கடும் போரில் தன்னிகரற்ற குலோத்துங்கனின் குமரியானாலும். குமரன் தோன்றி குறுநகை புரியின், குளிரும் விழியுடன், கொடியெத்துவண்டு சாயத்தானே வேண்டும்!!

“நடனராணி! கூச்சம் இப்போதிருந்து பயன் என்ன? வா! பந்தாடுவோம்” என்று அரசிளங்குமரி கூறினாள். நடனராணி என்ற பெயரே, நாம் குறிப்பிட்ட தோழியுடையது. நடனத்திலே மிக்கக்கீர்த்தி வாய்ந்தவள். நாட்டினர் அது பற்றியே, நடனராணி என்று அவளை அழைத்தனர். பந்தாடினர் பாவையர். நடனராணியை விட்டுப் பிரிந்த, அவள் காதலன் வீரமணியின் மனம்படும்பாடு, அவர்களாடும் பந்தும் படாது என்னலாம். கிளியைக்கண்டால், அவள் மொழி நினைவு! குயிலைக்கண்டால், அவள் கீதக்கவனம்! மயிலைக்கண்டால், அவளது நடன நேர்த்தியின் கவனம், அவன் நெஞ்சில் ஊறும். பொல்லாத பறவைகள், சும்மாவும் இல்லை. ஜோடி ஜோடியாகப் பறப்பதும், பாடுவதும், உண்பதுமாக உல்லாசமாகவே இருந்தன. ஊராள்வோன்உல்லாசத்துக்காகவேட்டைக்குக்கிளம்ப, வீரமணியும் உடன் சென்றான்! வேட்டைக்காரர் கிளப்பிய பறையொலியும், ஊதுகுழலொலியும், குதிரைக் குளம்பொலியும், வீரர் முழக்கொலியும் கேட்டு, பேடைக்குயிலும், மாடப்புறாவும், கோலமயிலும், கொக்கும் வக்காவும், பயந்து அலறிப்பறந்தோடின! புதர்களிலே சலசலெனச் சத்தம் கிளம்பிற்று. தொலைவிலே காட்டுமிருகங்கள் உறுமுவது கேட்டது. மோப்பம் பிடித்துச்செல்லும் நாய்கள், வாலை மடக்கி, தலையைக்குனிந்து தரையை முகர்ந்தன! இடையிடையே, புலிசென்ற அடையாளம் காணப்பட்டது. வீரர்கள் இன்று நல்லவேட்டைதான் என்று களித்தனர். மன்னன் குலோத்துங்கனும், வீரமணியும் மட்டுமே விசாரத்திலாழ்ந்திருந்தனர். வீரமணியின் விசாரம், காதலியிடம் சரசச்சமர்புரிவதைவிட்டு, சத்தற்ற வேட்டைக்கு வந்தோமே என்பதனால்! குலோத்துங்கனோ, பகைவேந்தர்களை வேட்டையாட சமயம் கிடைக்கவில்லையே, பயந்தோடும் மிருகங்களைத்தானே வேட்டையாடவேண்டி இருக்கிறது என்று கவலை கொண்டான். குலோத்துங்க சோழனின் வீரப்பிரதாபத்தை, வெஞ்சமர் பல நிரூபித்துவிட்டதால், வேந்தர் பலரும் விழியில் வேதனை தோன்றிட வாழ்ந்தனர், பறைஒலிகேட்டு அன்று மிருகங்கள் பயந்தோடியும், பதுங்கிக்கொண்டதும் போலவே, பல மன்னர்கள், குலோத்துங்கனின் படைஒலிகேட்டஞ்சிப் பயந்துப் பதுங்கினர். மன்னனின் படைத்தலைவன், மாவீரன், **கருணாகரத் தொண்டைமான்** “கண்டதுண்டமாக்கிக் கழுகுக்கிடுவேன், காயும் எதிரிகள் களத்திலே நிற்பின்” என்று முழங்கினான். எவரே எதிர்ப்படுவர்! உயிரிழக்க, அரசிழக்க, எவரும் ஒருப்படாரன்றோ! எனவே குறுநிலமன்னரும், குலோத்துங்கனுக்கு அடங்கியே வாழ்ந்தனர்! தோள் தினவெடுத்தன, வேட்டை ஒருசிறுபொழுது போக்காகுமென்றே மன்னன் புகுந்தான் காட்டிலே. தினவெடுக்கும் ‘உள்ளத்தைத்திருத்தும் நிலைகாணா, வீரமணி, மன்னன் பின் சென்றான், மனதை மங்கைபால் விட்டே வந்தான், வழிநடந்தான். (தொடரும்)

---

ஆசிரியர் கடிதம் 7ம் பக்கத் தொடர்ச்சி.

## திராவிட நாட்டுப் படம்

எல்லை இயல்பு குறித்து திராவிடநாட்டுப் படமொன்று தயாரித்து வெளியிட வேண்டும் என்று தோழர்கள் விரும்புகின்றனர். எனக்கு மிகவிருப்பம் அது. திருவாரூர் மாநாட்டிலே நிருவப்பட்ட கமிட்டி, அக்காரியத்தைச் செய்வதே பொருத்த மாகும். என்னைப்போன்ற தனி ஆள் செய்வது கூடாது. கமிட்டி கூடி, எல்லை நிர்ணயித்து, படத்தை வெளியிடவேண்டும்.

## அழைப்பு.

அடுத்தமாதத்திலே. தீவிர இளைஞர் மாநாடு. காஞ்சியில் நடைபெற இருக்கிறது காஞ்சீபுரம் தோழர். முனுசாமி B. A. அவர்கள் வரவேற்புக் கழகத்தலைவர். தோழர் C. D நடராஜன் M. A B. L. திறப்புவிழா வாற்றவும். நெடும்பலம் தோழர் N. R S. ராமலிங்கம B. A.. தலைமை தாங்கவும், குறிப்பிட்டுள்ளனர். திராவிடநாட்டுபிரிவினையை வலியுறுத்த. இம்மாநாட்டில் வேலைத்திட்டம் வகுக்கப்படும் என்னைக்கலந்தாலோசித்தனர். நான் சில யோசனைகள் கூறினேன், மாநாட்டிலே திருவாரூர் தோழர் T. V நமசிவாயம், பாரதிதாசனின் திராவிடநாட்டுப் பண்களைப்பாடவும். லெனின், பெரியார், படத்திறப்புவிழாக்களை முறையே தோழர்கள் T. P. S. பொன்னப்பன். A. K. T. சாம்பசிவம் ஆகியோர் நடத்தவேண்டும் என்றும் கூறினேன். மாநாட்டுவேலைகள் பூர்த்தியானதும் அழைப்பு அனுப்புவர். நானும் ஓர் அழைப்பு விடுத்து விடுகிறேன், மாநாட்டுக்கல்ல, திருமணத்துக்கு. தோழர் A K. T. சாம்பசிவம் (தோழர் A. K. தங்கவேலரின் திருமகனார்) அடுத்தமாதம், தமிழ் முறையில் திருமணம் நடத்திக்கொள்ளப்போகிறார். பெரியாரும், பாரதியாரும், வர ஏற்பாடு நடக்கிறது. பாகவதர் நமச்சிவாயம், தண்டபாணிதேசிகர் இசைவிருந்து. தங்கவேலர் ஆதிலட்சுமி அம்மையார் தம்பதிகளின் உபசாரம், இவ்வளவுக்கும் உங்களை அழைக்கிறேன் வருக!

C. N. அண்ணாதுரை.

காஞ்சி நிதி லிமிடெட்.
காஞ்சிபுரம்
29-வது ஸீரிஸ் ரூ. 500, 250, சீட்டுகள் 25—7—42ல் ஆரம்பிக்கப்படும் சந்தாதாரர்களாக சேர விரும்புவோர்கள் உடனே விபரங்களுக்கு எழுதவும்.
K. R. CHARY, B. A., Secretary.

திராவிடநாடு
ஞாயிறு] 12—7—42 [காஞ்சி.

# பலி பீடம்!

காந்தீயப்பலிப்பீடம், வழக்கம்போல் இவ்வாண்டும், குருதியில் குளிப்பாட்டுங்கள், ஊன் உனவு ஊட்டுங்கள் என்று கூவிற்று. இவ்வாண்டு, பிரதம பூசாரியையே பிடித்திழுத்துப் பலியிட, உடுக்கை கொட்டுவோர் தமக்குள் தீர்மானித்துக்கொண்டனர். ஆனால் பலிபீடத்திலே தலை உருளும்முன்னம், பிரதமபூசாரியாகிய அன்பர் ஆச்சாரியார், கோயிலைவிட்டு வெளிஏறிவிட்டார்! காங்கிரஸ் பதவியைவிட்டு, விலகிவிட்டார்!! காமராஜரின் காகிதக்கத்தி வீசப்பட்டதும், ஆச்சாரியார், அங்கு இருந்தால்தானே ஒழுங்கு நடவடிக்கை "என்று கருதி" உங்கள் உறவே வேண்டாம்" என்று கூறிவிட்டு வெளியேறிவிடத் தீர்மானித்துவிட்டார், காலைச்சுற்றிப் பின்னிக்கொண்டிருந்த கொடியைஅறுத்தெறிந்துவிட்டார். தாமே தேடிக்கொண்டசிறையைவிட்டு வெளி ஏறி, வெளியே உலவக்கிளம்பிவிட்டார்.

காந்தீயப்பலிபீடத்திலே, 1 938ல் தோழர் நரிமன் 1939ல் டாக்டர்கரே, 1940, சுபாஷ்சந்திரபோஸ், 1941ல் தோழர் M. N. ராய், ஆகியோர், சாய்ந்தனர். தோழர் M. N. ராய், மட்டுமே, தைரியமாகக் காங்கிரசை எதிர்க்கத்தொடங்கி, தனிக்கட்சி அமைத்துக்கொண்டார். தேசிய ஜனநாயகக்கட்சி எனும் அந்த கழகத்திற்கு நமது பெரியார் உபதுணைத்தலைவர், இதன் அடிப்படைக்கொள்கை காந்தியத்தை கருவறுப்பதேயாகும்.

பெரியார் அவர்கள் கூட, காங்கிரசைவிட்டு வெளி ஏறியது, காங்கிரசின் மூலம் நாட்டுக்கு நற்காரியம் செய்யமுடியாது என்பதைக் கண்டுகொண்ட பிறகுதான். அவர் விலகும்போது, இன்று ஆச்சாரியார், காங்கிரசில் எத்தகைய உயர்தரமான, செல்வாக்குள்ள பதவிகளை வகித்துவந்தாரோ, அதுபோன்றே இருந்தவர். இன்றைய காங்கிரஸ் "தலைவர்களிலே" பலர் அன்று வெறும் கொடிதாங்கிகள்!

ஏன்? ஏன்? வேண்டாம், போகாதீர்! போய்விட்டால் நாங்கள் என்னசெய்வது?;' என்று பலர் கேட்டுக்கொண்டு இருக்கும்போது, பலர் கலங்க, சிலரின் கண்களில் நீர் குலுங்க இருக்கும்போது, பெரியார், காஞ்சீபுரத்திலே, காங்கிரசின் கட்டை உடைத்தெறிந்துவிட்டு வெளிஏறினார், முகிலைக்கிழித்து வெளிவரும் முழுமதிபோல், வெளியே வந்தார், தமிழர் வாழ்ந்தனர்.

இன்று விலகும் ஆங்சாரியாரும், 30 ஆண்டுகள் உழைத்து அலுத்தவர், முடிசூடாமன்னராக இருந்தவர், மூலவரின் சுலோகங்களுக்கு வியாக்யான கர்த்தாவாக இருந்தவர், மூளபலத்தை வடநாட்டுத் தலைவர்களுக்குத்தந்துதவியவர், தமிழரின் விரோதத்தையும் பொருட்படுத்தாது வடநாட்டவரின் வாத்சல்யமே போதும்என்று நம்பினவர். மோகனதாச கரம் சந்த் காந்தியை மகாத்மாசாந்தியக்கினவர், ஆகாத திட்டங்களை ஆஸ்ரமவாசிவெளியிட்ட போதெல்லாம், இவர் அவைகளுக்குத் தமது அறிவுமுலாம் பூசி, பிரச்சாரம் செய்தவர், தென்னாட்டுக் காங்கிரசின் ஜீவசக்தி, விசை, ஆச்சாரியார் என்றால் அதுமிகையாகாது. ஆம்! அவ்வளவு அபாரமாக உழைத்திருக்கிறார், காங்கிரசுக்கு. ஆனால், காங்கிரசின் பாசிசம், அவரைச் சிதைக்கத்துணிந்தது. அதனிடமிருந்து தப்பினார், விலகிவிட்டார்.

விலகியவர், இனி என்னசெய்வார், என்பதைப் பொறுத்திருக்கிறது, விலகுவதால் உண்டாகும்பலன். ஆச்சாரியார் அயரமாட்டார் என்றே நாம்நம்புகிறோம்.

"வயதேறி வருகிறது, ஆசைகளெல்லாம்அடங்கிவிட்டன" என்று மித்திரன் எழுதுகிறது ஆச்சாரியாரைப்பற்றி. உண்மை! ஆரியவர்த்தத்தின் ஆதரவைக் கொண்டு ஆச்சாரியார் எவ்வளவோ சாதிக்க முடியும் என்று நம்பினார், ஆவலாக இருந்தார். ஆசை அவலமாயிற்று. எனினும் அவர், மனம் உடையமாட்டார் என்று நம்புகிறோம்.

நாட்டிலே, காந்தீயத்தின் முன்பு தலைவணங்க மறுத்து, அந்தப் பலிபீடத்திலே "கடா"க்களாக இணங்காது, காந்தீயத்தின் கேடுகளைக்களைந்தெரிய வேண்டுமென்பதற்காகவே, மாபெரும்வீரர்கள், தியாகிகள், எத்தகைய கஷ்டநஷ்டத்துக்கும் கலங்கா உள்ளம்படைத்தவர்கள், "தூ"வெனக்காரி யுமிழ்ந்துவிட்டுக் காங்கிரசைவிட்டு வெளிஏறி விட்டனர். காங்கிரஸ் டயர்களின் ஜாலியன்வாலாக்களிலே சிதறுண்ட தலைவர்களின் தலைகள் அனந்தம். காவியம்கற்ற கலியாணசுந்தரனார், கந்தரனுபூதி படித்துக் காலங்கழிக்கிறார், வைத்தியவரதரோ, வாட்டம்நிர கங்கையில் மூழ்குகிறார், மற்றும் எத்தனையோ தலைவர்கள், தமது தலைதெறித்துவிடக் கண்டனர். இறுதிக்காலத்திலே, உத்தமதேச பக்தர் வி. ஒ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் மனம் குமுறியதை, யாரே அறியார்! சீர்குலைந்த வாழ்வு, வறுமைப்பிணி முதுமைப் பருவத்திலே! யார் அவரை ஆதரித்தனர்! திருநெல்வேலிச் சீமையிலே தியாகத்தீயைமூட்டி அதிலே குளித்துக்குளித்தெழுந்த, குன்றாத உள்ளம்படைத்தகோமான், மங்கி, சுருண்டு, மகுந்தார், காந்தீயம் அவரை அங்ஙனமாக்கிற்று. மயிலை அய்யங்காரை, மூலையில் மடக்கிற்று.

12ம் பக்கத் தொடர்ச்சி. ஆறுமுகமும் அழுகுரலும்

தைக் குறைகூறினது தப்பு, தப்பு' என்றுகூறி. ஆச்சாரியார் ஆட்சியின் எதேச்சாதிகாரம், அவர் கட்சி ஆட்களையே உயிருள்ள ஜீவன்கள் அல்ல என்று அவர் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகையே, எடுத்துக்காட்டிக் கண்டிக்கும் போக்கிலே இருந்தது. மற்றவர்களைக் குறைகூற, இனி மானமுள்ள காங்கிரஸ் தோழன் முன்வரமாட்டான் என்று கருதுகிறேன்.

ஆறு பிரமுகர்கள் நியமனம் பற்றி அக்ரகாரம் அழுகுரலைத்தான் கிளப்பும். அதிலே ஆச்சரியமில்லை. நமது கட்சி, இதைப்பற்றி அக்கறை கொள்ளவில்லை. முஸ்லீம் லீக் இது குறித்து, முகாரிபாடாது. ஏனெனில், இதுகாலை இவ்விருகட்சிகளும், இன எதிர்கால வாழ்வுக்கு அடிகோலும் ஜீவாதாரமான பணியில் ஈடுபட்டுள்ளன. ஆரியரோ, அகப்பட்டதைச் சுருட்டும் இயல்பை நெடுநாட்களாகப் பெற்றவர். எனவே வைசிராய் நிர்வாக சபைக்குப்பல புதிய மெம்பர்கள் நியமனம் என்றதும், நாக்கில் நீர் ஊறக்காத்துக் கிடந்தனர். ஏமாந்தனர். அதனால் உண்டான எரிச்சல் ஐந்துவீரரும் ஒரு சூரரும் என்று அழுகின்றனர். இந்த ஆறு முகம், ஆரியரிடையே அழுகுரலைக் கிளப்பி விட்டதற்குக் காரணம், என்னவென்பீர்கள். ஆரியருக்கு இவர்களில் பெரும்பாலோர் 'ஆகாதவர்கள்.' ஆனால் என்செய்வது, ஆரியரே, "ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே" என்ற திருப்புகழ் தெரியுமோ, அந்தமெட்டிலே இந்தப் பாடல் உமக்காக ஸ்பெஷலாகத் தயாரித்தேன், அது உங்களுக்கு அர்ப்பணம், பெற்றுக் கொள்க!

"ஆரிய வஞ்சனைதனை அழிக்குமுகமொன்றே
ஆண்மையொடு காந்தீயம் அழித்த முகமொன்றே
சபர்மதி சூரகுலம் சாய்த்தமுக மொன்றே
சட்டபரிபாலனம் சமைக்குமுக மொன்றே
பாராளும் பண்பினை பயக்குமுக மொன்றே
பகைத்தவர் நடுங்கிடப் பார்க்குமுக மொன்றே
ஆறுமுக மானவிதம் நீரறிதல் வேண்டும்
ஆரிய குலத்தவரே அழுகைவிட வேண்டும்.

முதல் மூன்றுமுகம், நம்மவருக்குநன்கு தெரியும். ஆரியவஞ்சனையை அழிக்கும்முகம் டாக்டர் அம்பேத்காருடையது. ஆண்மையோடு காந்தியத்தை அழித்த முகம் சர். சி. பி. ராமசாமி ஐயருடையது, "திருவாங்கூர் வராதே, உஷார்!" என்று சர். சி. பி. கூறினதும் காந்தியார் அடங்கிய சம்பவம் நீங்கள் அறிந்தது தானே, சபர்மதிசூர குலம் சாய்த்த முகம், சர். முகமது உஸ்மானுடையது, சத்தியாக்கிரக காலத்திலே சாய்த்தாரே சூரப்புலிகளை அதுவும் தெரியும் உங்களுக்கு. மற்ற முகங்கள்மற்ற மூவருடையது. அவர்கள் பராளும் பண்பும், பகைவரை அடக்கும் திறனும் சட்ட அறிவும் பெற்றவர்கள். இந்த "ஆறுமுகம்" தோன்றியதைக் கண்டு, அழும் ஆரியருக்குத் தேறுதல் கூறவே, இத்தனையும் சொன்னேன்! தேறுவீரா?


## ஏஜண்டுகள் தேவை,

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக்செய்யவேண்டும்.

வாக்கு சாதுர்யமாக பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோரும், மாதம் ரூ. 150- முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

ஜில்லாக்கள்.

| | |
|---|---|
| 1. திருநெல்வேலி. | 7. வடஆற்காடு |
| 2 மதுரை | 8 செங்கற்பட்டு |
| 3. திருச்சிராப்பள்ளி | 9. கோயம்புத்தூர் |
| 4. தஞ்சாவூர் | 10 நீலகிரி |
| 5. இராமநாதபுரம் | 11. சேலம் |
| 6. தென்னாற்காடு | 12. சித்தூர். |

கே. எஸ். முத்தையா கம்பெனி,

சில்க் அவுஸ் காசி. (ஸ்தாபித்தது 1909.)

## வானம்பாடி வெளியீடுகள்!

பகுத்தறிவூட்டும்

பெரியபுராண ஆராய்ச்சி.

முதல் பாகம் ... 0—6—0.
இரண்டாம்பாகம் ... 0—2—6.
மூன்றும் பாகம் ... 0—3—0

நாலாவது பாகம் அச்சிலிருக்கிறது.

புரட்சிக்கருத்தும்,
தமிழ்ச் சுவையும் தரும்,
பாரதிதாசன் இயற்றிய
எதிர்பாராத முத்தம் 0—8—0

சௌமியன் எழுதிய சமுதாயச் சித்திரம்
குமஸ்தாவின் பெண்தான்!
அச்சிலிருக்கிறது.

எழும்பவில்லை! மார்க்கஸ் அரீலியசின் மனதிலே புகையும் தோன்றவில்லை. நாடகமேடையும் கேலிசெய்யும் அளவுக்குத் தன் மனைவியின் நடத்தை இருப்பதைக் கண்டும், மார்க்கஸ் அரீலியஸ், அதுவிஷயமாக மௌனமாகவே இருந்தான். முகமும் சுளியான்! மனைவியிடம் அன்பு காட்டுவதையும் குறையான்! அத்தகைய சாந்த குணமுடையான் அம்மன்னன்!

மார்க்கஸ் அரீலியஸ், இளைய பாஸ்டினுவைக்கடி மணம் புரிந்துகொண்டு, நாட்டுக்கு அரசனானதும் **வீரஸ்** என்பானையும் தன்னுடன் மன்னனாக இருக்க இடமளித்தான். ரோம் சாம்ராச்யத்துக்கு இரு சக்ரவர்த்திகள் ஏற்பட்டனர்! இருவரில், மார்க்கஸ் அரீலியசின் மாண்புகளே மணி ஒளியெனவிளங்கின. மக்களின் நலனைத்தன் நலனெனக்கொண்டு ஆண்டான், அறிவின் மிக்கோன். உலக அறிவாளிகள் உரைத்த வேதாந்தங்கள் ஐந்திரிபறக் கற்றுணர்ந்துவரும் வேளையிலே, இளையபாஸ்டினு, "நீண்டகருப்புச்சட்டைக்காரனடி, மன்னன் நெட்டுருபோட்டிடும் நேயனடி, கண்டாலும் கடுகடுக்காண்டி அவன், காதும் வாயும் பொத்திக்கிடப்பாண்டி" என்று சேடியரிடம் பாடினளோ யாதோ நாமறியோம். ஆனால், மன்னனைப்பற்றி அவள் எண்ணம் அதுவாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஏனெனில், அவள் ராணியானதும், தனது ரசமிக்க ரணகளத்தைவிட்டு அங்குலமும் நகரவில்லை! வெட்கம் பயம் விடுத்தாள்! ஊரார் உரையாடலை, வீணர்கூச்சலென்று ஒதுக்கித்தள்ளிவிட்டாள். "என் ஆனந்தவாழ்வைத் தடைசெய்யயாருக்கும் உரிமை இல்லை," என்று கருதினாள். கனிகிடைப்பது ரசம் பருக, மலரிருப்பது மணம் நுகர, வாழ்க்கை இருப்பது இன்பக்கேணியிற் குளிக்க, என்ற இந்த சிருங்காரரச சித்தாந்தத்தில் இவள் தேறினாள். மார்க்கஸ் அரீலியஸ், மலைகுலையினும் நிலைகுலையாதிருத்தல் வேண்டும், மாநிலமயக்கு விடவேண்டும், மதிவேண்டும், கதிஈது வென்றுணரும் சக்திவேண்டும், அண்டசராசரத்தின் தன்மையினை அறிதல் வேண்டும், அவனடியார் எவரெனினும் போற்றல் வேண்டும், அடுத்துக்கெடுப்பாரையும் அழித்தல்கூடாது, அகந்தையும் அறியாமையும் அணுகவிடல் ஆகாது, சிந்தையில் சோகம் புகவிடலாகாது, பகைவரிடமும் பாசமே காட்டமுயலுதல் அறநெறியாகும், பாதகம் நீக்குவதே பாரோரின் கடமையாகும்; அஞ்ஞானமகற்றி மெய்ஞ்ஞானம் விளைத்து, ஆனந்தந்தர அறிவைப்பெருக்கி, ஆசையைச்சுருக்கி, ஆணவத்தைக்கருக்கி, அருள்தேடி வாழவேண்டும் என்ற வேதாந்த சித்தாந்த போதனைகளைக்கேட்டும் கூறியும், படித்தும் போதித்தும், இருந்துவந்தான்.

புத்தகமெடுக்கவே அறிவான்என்று கூறமுடியாது, போரிலும் புலியே, மன்னன். உடனாண்டவன் மாண்டபின்னர், உலகே புகழும் போரில், மார்க்கஸ் அரீலியஸ் ஈடுபட்டான். சிரியாவிலே சீறி எழுந்து ரோம் சாம்ராச்யத்தைச் சிதைக்கமுனைந்த **பார்த்தியன்** எனும் இனத்தாரைக் கடும்போரிட்டு முறியடித்தான். போர்க்களத்திலே, கூடாரத்திலே, சிறிதளவு ஒய்வு கிடைக்கும்போதும், வாளை உறையிலிட்டதும், மன்னன் ஏட்டை எடுத்துப்படிப்பான், இன்றேல், "என் எண்ணங்கள்" என்றநூல் எழுதுவான்! இங்ஙனம் வாழ்ந்தான் வேந்தன். ரோம் சாம்ராச்யம் மார்க்கஸ் அரீலியசைப் புகழ்ந்தது. தங்கக்குணமுடையோனுக்குத் தாபத்தணல்மிக்க தையல், பெண்டாகவாய்த்தாளே, என்று மக்கள் மனம் வருந்தினர். மன்னன் அதுகுறித்துக் கவலையற்றிருப்பது கண்டபிரதானியர் வெகுண்டனர். சிலர் மன்னனிடம் முறையிட்டுங் கொண்டனர். மன்னனோ, மௌனமாக இருப்பான், இல்லையேல், "நானறிவேன் நண்பர்களே!" என்று உரைப்பான். சுடாதநெருப்பு, சுழலாத கடல், இராது அதுபோல், காமக்கருத்திகள் கள்ளக்காதலரைத்தேடி அலையாது இரார், என்று மன்னன் கருதினன்போலும். பெரியாரின் மொழிகளிலே, எவை சிறந்தன, ஞானிகளின் வழிகளிலே எவை காலத்துக்குகந்தன என்ற அறிவுத்துறை ஆராய்ச்சியிலே மன்னன் ஈடுபட்டிருந்தான். மோகமானைத்தாவிப்பிடித்த மாதோவெனில், ஆணழகரிலே, யார் நமது கண்ணையும் கருத்தையும் இழுத்திடும் இயல்பினர், என்று ஆராயும் இன்பத்துறையிலே இழிவையுங் கருதாது ஈடுபட்டு வந்தாள். வெப்பம்தீர இளநீர் பருகுவான் ஒருவன், வெப்பமூட்டும் கள் குடிப்பான் மற்றொருவன், ஈவான் ஒருவன், களவாடுவான் இன்னொருவன், மெய்யுரைப்பான் ஒருவன், பொய்யே பேசுவான் மற்றொருவன், உலகம் இது. கனிகுலுங்கும் தோட்டத்தின் பக்கத்திலே, காலில் தைக்கும்முள் இருக்கும்! மார்க்கஸ் அரேலியஸ் வாழ்ந்த இடத்திலே, இளைய பாஸ்டினுவும் இருந்தாள்! கப்பலோட்டுபவரையும், களியாட்டக்காரரையும், உடற்கட்டுக் கொண்டோரையும், வரிசையாக வரச்செய்து, வளமுள்ளவனைத் தேர்ந்தெடுப்பாளாம், ரோம்நாட்டு ராணி இளையபாஸ்ட்டினு! அலைபோல் மோதும் ஆசையை அடக்க அலைகடலை அடக்கும் மரக்கலஞ் செலுத்துவோரைத் தேடினள்போலும்! மார்க்கஸ் அரேலியசின் புகழும் செல்வாக்கும், படைகளின் போர்த்திறனும், பிரதானியரின் பக்கபலமும், ரோம் சாம்ராச்யத்துக்கு அதுசமயம், இருமுறை ஏற்பட்ட ஆபத்தைத்தடுத்தன. காசியஸ் என்ற படைத்தலைவன் மார்க்கஸ் அரேலியசின்மீது போரிடத்துணிந்து, துரோகியாகி, புரட்சிக்கொடியைப்பறக்கவிட்டான், நாடே சீறிஎழுந்தது. காசியசின் தலை தரையில் உருண்டோடியது. மன்னன் அவன் மனைவியையும் மக்களையும், மன்னித்து, போஷித்தான். அருள் நெறியால் அனைவரையும் மன்னன் மகிழ்வித்தான், அவள் காமவெறியால், காட்டிலே புலி இரத்த மோப்பம் பிடித்து அலைவதுபோல் உழன்றாள். மன்னன் ஆசியாப்பகுதி சென்று வரப்புறப்பட்டபோது, அவளும் உடன் சென்றாள், அந்தக்கண்டத்து இறையின் ருசிகாணவோ, ஏதோ, நாமறியோம். வழியிலே மாண்டாள். மன்னன், அவள் சாவுக்காக சஞ்சலமடைந்தான், அவளுக்கு இறுதிமரியாதைகளும் செய்தான். தாரமிழந்த மன்னனைத் தன்வலையில் வீழ்த்தக் கிளம்பினாள் வேறொருத்தி. அவள், மன்னனோடிருந்து ஆண்டுமாண்ட வீரஸ் என்பானின் தங்கை, **பேமியா**, என்பவள். அவளது கணைகள் கூர்மழுங்கிக்கீழே வீழ்ந்தன! மன்னன், மக்கள் மகிழ ஆட்சிசெய்து, பின்னர் அவர்களை விட்டுப்பிரிந்தான், இறந்தான்.

2ம் பக்கத் தொடர்ச்சி. ஆறுமுகமும் அழுதாலும்

கல்கியின் கருத்தே! படியும் இதனையும், 'தற்சமயம் மகாத்மாஜியைச் சுற்றி யிருப்பவர்கள் பக்தி மட்டும் உள்ளவர்களாதலால் தான் மகாத்மா மேலும் மேலும், விளக்கம் கூறுவது அவசியமாகிறது" என்று கல்கி எழுதிற்று. பக்திஉண்டு. யுக்தியோ, தவறைத்திருத்தும சக்தியோ இல்லாத பல்லாண்டு பாடிடும் கோஷ்டியே இப்போது வார்தாவிலே காந்தியாரைச் சுற்றி வட்டமிடுகிறது என்பது குட்டிக் கல்கியின் கருத்து. கோழி பிடிக்கச்செல்லும் குள்ளநரி கள்ளநடைநடந்து கதவிடுக்கில் நுழைந்து போவதுபோல், காந்தியார் சுயபுத்தியற்றவர் என்பதைக்கூற, கல்கி, அர்ச்சனையைக் கலக்கி, பின்னர் உண்மையை, முக்காடிட்டுக் கொண்டுவந்து நிறுத்துகிறது நம் முன்பு! நடுக்கத்தால் பிறந்த அந்தநாசூக்கான முலாம் நீக்கிப் பாருங்கள், கல்கி கூறியதிலிருந்து, மூன்று தகவல்கள்தெரிய வருகிறதா இல்லையா.

(1) காந்தியாருக்குச் சொந்தப்புத்தி இல்லை.

(2) இதுவரை ஆச்சாரியாரைக் கேட்டு அவர் திருத்தியபடியே நடந்து வந்தார்.

(3) இப்போது காந்தியாரைச் சூழ்ந்திருப்பவர்கள், சுத்த மண்டுகள்!

ஐந்துவீரரும் ஒரு சூரரும், தென்படும் தேவியின் கண்களுக்கு, மதி இரவல்பெறும் மகாத்மாவும், ஆட்டிவைக்கும் ஆச்சாரியாரும், கையைக் கட்டிநிற்கும் கபந்தங்களும் இருத்தல் தெரியவில்லையா! ஏளனமாகக் கூறிவிட்டாளே தேவி, அதிகாரம் வகிக்கப் போகும் அறுவரை, அதே ஏளனத்துக்காக நான், தேவியின் பூஜைக்குரிய திருக்கூட்டத்தைப் பற்றி, சூன்ய முனிவரும், அவரைச் சூழ்ந்துள்ள முண்டங்களும் என்று எழுதினால் தேசீயத் திருக்கூட்டத்துக்குக் கோபம் பொங்காதா என்று கேட்கிறேன். பாருங்கள் உமது மனக்கண் கொண்டு அந்தப் படத்தை "இரவல் மதிவாங்கும் மகாத்மா, மறுமணத்துக்குத் தயாராகும் ஆச்சாரியார், விஷயமறியாத வீணர்கள், இதுதானே வார்தாக் காட்சி கல்கியின் எழுத்தோவியத்தின் படி! இத்தகைய இடத்தை ஏத்தித் தொழும் தேவியும் பிறவும், பிறரைப்பற்றிப் பேச, நாக்கை நீட்டுகின்றனவே. சொரணை என்ற சாணைக் கல்லிலே, நாவை வைத்துத் தீட்டிக்கொண்டு, மானம் எனும் மருந்துண்டு, பேதைமை எனும் நோய் போக்கிக் கொள்ளக் கூடாதா? என்று கேட்கிறேன். வீரர், சூரர், என்று ஏளனம் புரியும் ஏடுகள் இந்தப் புதிய நிர்வாக சபையினர், வெறும் பொம்மைகளாக இருப்பர் என்றும், வைசிராய் ஒரு பொம்மைக் கொலுவைத்திருக்கிறார் என்பதும் போக்கிரித்தனமன்றோ!

பொம்மலாட்டத்திற் கைதேர்ந்தவர் காந்தியார், அவரது பொம்மைகள் பிறரைப் பொம்மைகளெனக் கூறுவது, குடியனும் பித்தனும் மற்றையோரைத் தூற்றும் தன்மையது போன்றதாகும். குறும்புக் குணங்கொண்ட குரங்கு, தன்முகத்தின் அவலட்சணத்தையும், கோணற்சேட்டையையும் பிறர் கண்டு பரிகசிப்பதைப்பற்றிக் கருதாது, அதுபிறரை அழகு காட்டும்! அதுபோலிருக்கிறது காந்தீயக் கொலுப் பொம்மைகள், கொடிதாங்கிகள் மற்றவரைப் பொம்மைகளென்றுரைப்பது. ஆச்சாரியார் ஆட்சியிலே ஆடிக்கிடந்தன இந்தப் பொம்மைகள். அசகாய சூரரென வெளியே ஆர்ப்பரித்தன, ஆனால் ஆட்சி மன்றத்திலே, ஆமைபோல் நுழைந்து, ஆந்தைபோல் விழித்து, மந்திபோல் இளித்துக்கிடந்தன, என்று அக்காலை இடித்துக்கூறாதாரெவரே! கொட்டாவிவிட்ட நேரந்தவிர, வாய்திறந்தறியாத வக்கிரங்களுக்குப் பிறரைப் பொம்மைகளென்றுரைக்க வாய் உண்டா? எவ்வளவு தைரியம் பாருங்கள்! இந்தக்காங்கிரஸ் M. L. A. க்களைக் கடிவாளமிட்டுக் கருப்புக் கண்ணாடியார் காடுமேடெல்லாம் இழுத்துத் திரிந்ததை இவர்கள் மறப்பினும் நாம் மறந்துவிட முடியுமா! சட்டசபையிலே, கட்டுப்பாடாக மௌன தேவனைத் தொழுது, சிலவேளைகளில் நித்திராதேவியைத் தழுவி வாழ்ந்த இவர்கள் தாம் எந்தத்தொகுதிக்கு M. L. A. வாகினரோ அந்தத் தொகுதிபற்றி வாய்திறந்து பேசியதுண்டா? அவர்கள் மறந்தது மக்களை! மறவாதது மாதம் 75 ரூபாயை!! இத்தகைய மண்ணாங்கட்டிகளைக் கொலுநிறுத்தி வைத்திருந்ததை நாடு மறக்குமா! இவைகளைத் தலைவர்களாகக் கொண்ட ஏடுகள், வைசிராய் நிர்வாகசபைக்குச் செல்லும் தலைவர்களை, பொம்மைகள் என்றுரைப்பது பொச்சரிப்பினாலேயன்றி வேறென்ன காரணத்தால் என்றுகேட்கிறேன். நான் காங்கிரசை எதிர்ப்பவன் ஆகையினால், இந்தத் தலைவர்களைப் பொம்மைகள் என்றுகூறினேன் என்று சவுண்டிகள் சாக்குக்கூறும். நான் கூறினதும் கூறுவதும் கிடக்கட்டும். இதோ! 'பாரததேவி' யின் புலம்பலைக் கேளுங்கள். "சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபை இருந்தபோது கட்சிமெம்பர்கள் உயிருள்ள ஜீவன்களைப்போல் நடந்துகொண்டதாக நமக்கு ஞாபகமில்லை!" இது பாரததேவியின் 3-ந்தேதி தலையங்கமப்பா! உயிருள்ள ஜீவன்களாக நடந்துகொள்ளவில்லை, இந்தக் காங்கிரஸ் M. L. A. க்கள்! தஞ்சைத் தரணியிலே தேசீயக்கொடி ஏந்தி, வைரம் டாலடிக்க, வட்டிவியாபாரம் பெருக்க, வாகனம் வண்டி குலுங்க, 'வந்தார் தென்னாட்டு நேரு' என்று தாகசாந்தி தீர்த்ததால் திருப்திகொண்ட தொண்டர் குழாம்பராக்குக்கூற பவனிவரும் நாடிமுத்து அவர்களே! தீப்பொறியோ, சுரங்கவெடியோ, எரிமலையோ பாயும்புலியோ என்று பலரும் பயந்துகூறும் வண்ணம், படபடவெனப் பேசிடுவீர், கடகடவென நடப்பீர், கனல் கக்குவீர், பொப்பிலியும் திப்பிலியும் எனக்கு நிகரல்லவே என்று முழக்குவீர், திருச்சி என்கோட்டை, நான் வகுப்பதே மற்றவருக்குப் பாட்டை, வீரர்கள் வலம் வருவர் என்வீட்டை, வீசுவேன் விரோதிகள்மேல் சாட்டை, எவரும் விரும்பார் என் விரோதமெனும் கேட்டைஎன்று:கர்ஜிப்பீரே, ஐயா இரத்தினவேலுத் தேவரே, ரணகளச்சூரரே! சேலம் ஜில்லாவிலே ஒரு ஜெயக்கொடி என்நாளிலே நாட்டுவேன், படைகூட்டுவேன், பகைமூட்டுவேன், தோள்தட்டுவேன், வெற்றி எங்கும் கொட்டுவேன் என்றுபாடும் வீராதிவீர வீர மார்த்தாண்ட நாச்சியப்பர் அவர்களே! பால்வடியுமுக அழகரே பக்தவத்சலமே! வைத்திய சீனுவாசரே! வக்கீல்பாஷ்யம்அய்யங்காரே! சட்டநாதரே, சொக்கலிங்கரே, சுப்பையாவே, சுப்ரமணியமே! — காங்கிரஸ் M. L. A. க்களே, கண்ணியமிக்கவரே, கேளும், கேளும், நீங்கள் உயிருள்ள ஜீவன்களாக நடந்து

கொள்ளவில்லை என்று உமது கட்சி ஏடு, உம்மைக் கூறுகிறது. இதற்கென்ன கூறுகிறீர்? நீங்கள் சட்டசபையிலே, உயிருள்ள ஜீவன்களாக இல்லையாமே, ரோஷம்இல்லையோ உங்களுக்கு, பாரத தேவியின் இந்தப்பேச்சைக் கேட்டபிறகு. அந்த நாளிலே, சந்தர்ப்பம் இருந்தபோது நீங்கள் சட்ட சபையிலே, மற்றக்கட்சியினர் ஆண்டபோது சட்ட சபையினர் நடந்துகொண்டதுபோல், மக்களிடம் அக்கறைகொண்டு, மாம்பலத்தார் பின்னால் செல்வதைவிட, மதிவழி செல்வதே சரிஎன்று விஷயவிளக்கங்கூறி, விவாதத்திலே கலந்துகொண்டு, விவேகிகள் மன்றம் என்ற பெயர் சட்டசபைக்குப் பொருந்துமாறு செய்திருந்தால், இன்று, உங்கள் கட்சிஏடு, உங்களை "உயிருள்ள ஜீவன்களாக" நீங்கள் நடந்துகொள்ளவில்லை என்று இடித்துக்கூறுமா? இந்த ஆலவட்டம் வீசப்பெற்றீரே, எனக்கு வெட்கம் பிறக்கிறது, சொரணை பிறக்கவேண்டிய இடத்திலே காணோமே நான் என் செய்வேன். இந்த இலட்சணத்திலே, மற்றவர்களைப் "பொம்மைகள்" என்றுகூறுவது எவ்வளவு துடுக்குத்தனம் என்பதைத் தோழர்களே, சற்று யோசித்துப் பாருங்கள்.

சினிமா வருவதற்குமுன்பு, "பொம்மலாட்டம்" நடப்பது வழக்கம் நம்நாட்டிலே. பெரிதும் அரிச்சந்திர நாடகந்தான் நடக்கும். பொம்மைக்குக் கயறுகள் கட்டிவிட்டு, பின்னாலே இருந்து ஆட்டிவைப்பார்கள். அதற்கும் சட்டசபையிலே நடந்ததற்கும் வித்தியாசமில்லை! கேளுங்கள் "பாரததேவி" இந்தப்பொம்மைகளைப்பற்றிமேலும் வர்ணித்திருப்பதை. "**எதிர்க்கட்சியினர் வோட் கணக்கெடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினால், அந்தச்சமயத்தில் கைதூக்கும் பொம்மைகளாய் இருந்ததைத் தவிர வேறெந்த உருப்படியான காரியத்தையும் செய்துவிடவில்லை**". கைதூக்கினவாம் இந்தப் பொம்மைகள்!

கைகூப்பின! கைதூக்கின! கைநீட்டின!—இன்று கை பிசைந்துகொள்கின்றன. சட்டசபையிலே ஆச்சாரியார் நுழைந்ததும் கைகூப்பவேண்டியது, வோட் கணக்கெடுக்கும் வேளையிலே ஆச்சாரியார் கண்சிமிட்டியதும் கை தூக்கவேண்டியது. மாதம் முடிந்ததும், 75க்குக் கை நீட்டவேண்டியது! இதுதானே 'இதுகள்' செய்துவந்த காரியம். இன்று குறிப்பாக '75' இல்லையே என்று கைபிசைந்து கொள்கின்றன! சட்டசபைகளிலே இவர்களின் கைவண்ணமும், பொதுக் கூட்டங்களில் கேள்வி கிளம்பும் காலத்திலே இவர்களின் கால்வண்ணமும் கண்டோம், வேறென்ன கண்டோம்!

'பாரததேவி' இதைக் கூறிவிட்டுச்சும்மாவுமில்லை. மறுக்க ஆள் இல்லை என்றும் கூறியிருக்கிறது. '**இதை மறுக்கத் தினமணிக்குத் தைரியமுண்டா**" என்று கேட்கிறது பாரததேவி. மித்திரனையோ விகடனையோ கேளாமல், தினமணியை இந்தக் கேள்விகேட்டதிலே ஒரு பொருத்தமிருக்கிறது! தினமணியின் ஆசிரியர் ஒரு M. L. A.! ஆகவேதான், 'தேவி' தைரியமாகக் கேள்விபிறப்பித்திருக்கிறது. ஆச்சாரியாரின் அதிகாரம் என்ற இரதத்தை இழுத்துச்செல்லப் பூட்டப்பட்ட புரவிகளிலே தினமணியும் ஒன்று. தினமணி என்ற பெயர்கூட, புராணத்தின்படி, ஒருகுதிரையின் பெயர் என்று ஞாபகம்!! "இது ஒருபெரிய குற்றமா சார்! சட்டசபையிலே கட்சி ஒற்றுமை கருதி, சகலரும் தலைவருக்கு அடங்கிஇருந்தனர். விவாதம்செய்து வீண்பொழுது போக்குவானேன் என்று இருந்தனர். விஷயம்பூராவும், கட்சிக்கூட்டத்திலேயேபேசி, விவாதித்து முடிவுகட்டிக்கொண்டு, பிறகு மசோதாவாக சட்டசபைக்கு வருவது வாடிக்கை. ஆகவே காங்கிரஸ் M. L. A. க்களுக்கு, சட்டசபையிலே விவாதிக்க வேண்டிய அவசியமே இல்லை" என்று அறிவாளிகளாகத் தங்களைத் தாங்களே நம்பிக்கொண்டு உள்ள சில காங்கிரஸ் பிரகஸ்பதிகள் வாதாடுவர்!

அந்த வெட்கக் கேட்டையும், கேட்டுவிடுங்கள். கட்சிக் கூட்டத்திலேயும் இதே கதிதான்! "**சட்டசபை 10ந்தேதி கூடுவதாயிருந்தால் 9ந்தேதி யன்றுதான் கட்சிக்கூட்டம் கூட்டப்படும் எவ்வளவு பெரிய மசோதா வருவதாயிருந்தாலும் முன்னதாக மெம்பர்களுக்குத் தகவல் கிடைக்காது நாளை அசெம்பிளியில் இன்னின்ன விஷயங்கள் வருகின்றன வென்ற தகவல் மட்டும்தான் மெம்பர்களுக்குக் கொடுக்கப்படும்**" இதுவும், பாரததேவி' வாக்கு! பார்த்தீர்களா பாபம், இந்தப்பரிதாபத்துக் குரியவர்களின் வாழ்வை! சட்டசபையிலே எப்படியோ, அதுவே தான் கட்சிக் கூட்டத்திலும். வெட்டிக்கு உலவினர் வீண்காலம் போக்கினர்.

"**உயிருள்ள ஜீவன்கள் இப்படி நடத்தப்படுவதற்குச் சம்மதித்திருப்பார்களா?**" என்று பாரததேவி கேட்கிறது. தேவர் முதலாய ஆச்சாரிய அன்பர்காள் பதில் கூறுங்கள்! **பிணங்கள்** என்று கூறுவதைவிட வேறு கடினமான கண்டனம் உண்டோ! உயிரிருக்கையிலே, ஒருவேளை சோறும் வயிறாரப் போடாது, செத்தபிறகு, பனிநீரால் குளிப்பாட்டி பட்டாடை போட்டு, பல்லக்கில் வைத்து, பத்துஜதை மேளம் கொட்ட வைத்து பிணத்தைத் தூக்கிச்செல்லச் செய்கிறார்களே, அதுபோல் சட்டசபையிலே காவடிதூக்கியின் வாய்க்குச் சீலையிட்டதுபோல் இவர்களை இருக்கச்செய்து விட்டு, பிறகு வெளியே இரண்டோர் வார்த்தை அவர்களைப் புகழ்ந்து பேசிவிடுவார் ஆச்சாரியார். அவ்வளவுதான், இவர்களுக்கு உச்சி குளிர்ந்துவிடும்! இத்தகைய திருமேனிகளின் கூட்டம் இன்று வைசிராய் நிர்வாக சபையிலே இருப்போரை பொம்மைகள் என்று கூறுவது மடத்தனத்தின் சிகரமல்லவா என்று கேட்கிறேன். போர்க்காலத்திலே பிரிட்டிஷ் பார்லிமெண்டிலே, சென்றவாரம், சர்ச்சில் மந்திரிசபையை எவ்வளவு காரமாகக் கண்டித்தனர். விவாதம் எவ்வளவு கடுமையாக இருந்தது, சாதாரண காலத்திலே சென்னை சட்டசபையிலே ஆச்சாரியார் ஆட்சியிலே "பொம்மைகள்" கொலுவீற்றிருந்தபோது எவ்வளவு மௌனம் குடிகொண்டிருந்தது, என்பதை இந்த இருசபைகளையும் ஒப்பிட்டுப்பார்த்துவிட்டு காங்கிரஸ் தோழர்களே ஓராயிரம்தடவை கன்னத்திலே போட்டுக்கொள்ளுங்கள், 'பிரிட்டிஷ் எதேச்சாதிகாரத்

(8ம் பக்கம் பார்க்க)

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51, Nimanthakara Street, L. Conjeeveram.